(Under Section 173 BNSS)

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120383

1. District : Vellore மாவட்டம் PS: Vigilance & Anti Corruption காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 01/2025 மு.த.அ. எண் Date: 18.03.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a) of PC (Amendment) Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 17.03.2025 @ 13.30 hrs.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.03.2025 Time : நேரம் 09.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. I Time : நேரம் 10.00 hrs. on 18.03.2025

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் O/o the Village Administrative Officer, Veppur village Gudiyatham Tk. — 30 km North West

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Nijamudeen (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Mynudeen

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 41/2025 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Auto driver (g) Address : முகவரி No. 5/45, 5/176, Periyam Pattarai Napal rd. Gudiyatham Rd Veppur village. Vellore Dist.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Gopinath, VAO, Veppur village. Gudiyatham Tk. Vellore District.

8. Reasons for delay In reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 18.3.25 [signature] 18.3.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18.03.2025 @ 10.15 hrs.

Name: பெயர் G.MYTHILY
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
VAC, Vellore..

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இன்று 18.03.2025-ஆம் தேதி 09.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.நிஜாமுதின் வயது.41/2025 த/பெ மைனுதின், எண்.5/45, 5/126, பெரியான் பட்டரை, நாகல் ரோடு, குடியாத்தம் R.S, வேப்பூர் ஊராட்சி, குடியாத்தம் தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு வேலூர் 18.03.2025 அனுப்புநர், M. நிஜாமுதின், வயது.41/2025 த/பெ மைனுதின், எண்.5/45, 5/126, பெரியான் பட்டரை, நாகல் ரோடு, குடியாத்தம் R.S, வேப்பூர் ஊராட்சி குடியாத்தம் தாலுக்கா, வேலூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, வேலூர் மாவட்டம். அய்யா, நான் வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா வேப்பூர் ஊராட்சி நாகல் ரோட்டில் வாடகை வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி 2 பெண் குழந்தைகள் மற்றும் ஒரு ஆண் பிள்ளை உள்ளனர். மனைவி பெயர் கத்திஜா. நான் சொந்தமாக ஷேர் ஆட்டோ வைத்துள்ளேன். குடியாத்தம் ரயில்வே ஸ்டேசன் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் ஆட்டோ ஓட்டி ஜீவனம் செய்து வருகிறேன். என்னுடைய தந்தை பெயர் மைனுதின், தாயார் பரிதாபேகம். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன் ஒரு தம்பி உள்ளனர். வேலூர் மாவட்டம் குடியாத்தம் தாலுக்கா வேப்பூர் கிராமத்தில் கிராம சர்வே எண்.98/7-ல் 689 சதுர அடி காலி மனை எனது தாயார் திருமதி.பரிதாபேகம் அவர்களின் பெயரில் இருந்தது. மேற்படி காலி மனையினை எனது தாயார் பரிதாபேகம் அவர்கள் கடந்த 12.11.2024 அன்று வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.4932/2024 மூலம் என்னுடைய பெயருக்கு தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்தார். அந்த காலி மனை இடத்தில் நான் வீடு கட்ட வேண்டும் என்று முடிவு செய்து வேலை தொடங்கினேன். என்னிடம் போதிய பண வசதி இல்லாததால் வங்கியில் கடன் பெறுவதற்காக வங்கியில் சென்று விசாரித்த போது அந்த இடத்தின் பட்டா எனது பெயருக்கு மாற்றி கொண்டு வருமாறு கூறினார்கள். அதன் பிறகு என்னுடைய தாயார் பெயரிலிருந்து என்னுடைய பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி நான் கடந்த 02.01.2025 அன்று ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். நான் விண்ணப்பம் செய்த நாளிலிருந்து சுமார் 15 நாட்கள் கழித்து ஆன்லைனில் சென்று பார்த்த போது என்னுடைய தாயார் பெயரிலிருந்து என்னுடைய பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யாமல் மீண்டும் என்னுடைய தாயார் பெயரிலேயே பட்டா கொடுத்துள்ளனர். அதன் பிறகு அன்றைய தினமே (தேதி ஞாபகமில்லை) நான் வேப்பூர் VAO அலுவலகம் சென்று VAO திரு.கோபிநாத் அவர்களை பார்த்து பட்டா பெயர் மாற்றம் குறித்து கேட்டேன்.. அதற்கு VAO திரு.கோபிநாத் அவர்கள் நீ என்னை வந்து பார்க்கவே இல்லை எதுவும் கேட்கவும் இல்லை எனக்கு தெரியாமல் தான செட்டில்மெண்ட் செய்து விட்டு நீ ஆன்லைனில் மட்டும் அப்ளை செய்தால் உன்னுடைய பெயரில் பட்டா வாங்கிவிட முடியுமா. அதற்கு நான் என்னிடம் எல்லா ஆவணங்களும் உள்ளது என்று கூறி அசல் ஆவணங்களை எடுத்து VAO திரு.கோபிநாத் அவர்களிடம் காண்பித்தேன். அதை அவர் பார்த்துவிட்டு மீண்டும்

என்னிடமே கொடுத்துவிட்டு பட்டா உன்னுடைய பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்றால் நீ எனக்கு தனியாக பணம் கொடுத்தால் தான் பட்டா பெயர் மாற்றம் செய்து தரமுடியும் என்று கூறினார். அதற்கு நான் ஆட்டோ ஓட்டி பிழைப்பு நடத்தி வருகிறேன் அதோடு வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனவே தனியாக பணம் கொடுக்க இயலாது என சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு 17.03.2025 அன்று மதியம் சுமார் 1.30 மணிக்கு வேப்பூர் VAO அலுவலகம் சென்று VAO திரு.கோபிநாத் அவர்களை சந்தித்து பட்டா பெயர் மாற்றம் குறித்து விசாரித்தேன். அதற்கு அவர் பணம் ரூ.15,000/- கொடுத்தால் பட்டா பெயர் மாற்றம் செய்ய அனைத்து வேலைகளையும் நானே பார்த்து கொள்வேன். பணம் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.12,000/- கொடுத்தால் பட்டா மாற்றம் என்று கூறினார். அதற்கும் நான் இல்லை என்று கூறியதற்கு கடைசியாக ரூ.10,000/- கொடுத்தால் பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்கிறேன் என்றும் இல்லை என்றால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கூறிவிட்டார். அதோடு பணம் கொடுக்காமல் எத்தனை முறை ஆன்லைனில் விண்ணப்பம் செய்தாலும் பட்டா உன் பெயருக்கு மாறாது என திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். லஞ்சமாக பணம் ரூ.10,000/- கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய எனக்கு விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.10,000/-ம் கேட்கும் வேப்பூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.கோபிநாத் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக ஆன்லைனில் அப்ளை செய்த ரசீதினையும், என்னுடைய தாயார் என்னுடைய பெயருக்கு தானசெட்டில்மெண்ட் செய்து கொடுத்த பள்ளிகொண்டா சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான ஆவண எண்.4932/2024-ன் நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். ஒம்/- M.நிஜாமுதின் 18.03.25

Sir,

Today 18.03.2025 at 09.00 hrs Tr.Nijamudeen, S/o Mynudeen, Veppur Village, Gudiyatham Taluk, Vellore District appeared before me at office of the DSP, V&A.C., Vellore and given a complaint against Tr.Gopinath VAO, Veppur Village, Gudiyatham Taluk, Vellore District for the allegation of demand of undue advantage as bribe from him. Sd/-xxxxxx 18.03.2025

Sir,

After verifying the antecedents of accused and credibility of the complainant and with the concurrence of the DVAC, Chennai, registered a case in Vellore V&AC Cr.No.01/2025, U/s.7(a) of the PC (Amendment) Act 2018 on 18.03.2025 at 10.00 Hrs. Sd/-xxxxxx 18.03.2025 Inspr. of Police, V&AC, Vellore.

Sir,

The original FIR along with the complainant was sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to the officers concerned.

18.3.2025
(G.MYTHILY)
Inspr. of Police
V&AC Vellore